2. கலாவிடம் 5 வண்ண பென்சில்களும் விமலிடம் 4 வண்ண பென்சில்களும் உள்ளன. அவர்கள் இருவரிடமும் உள்ள வண்ண பென்சில்கள் மொத்தம் எத்தனை?



$\square + \square = \square$

3. கழித்து எழுதுக.

$$\begin{array}{r} 9 \\ -\ 5 \\ \hline \square \end{array}$$

4. ஒரு மரத்தில் 7 பறவைகள் இருந்தன, அவற்றில் 2 பறவைகள் பறந்துவிட்டன. மீதி உள்ள பறவைகள் எத்தனை?



$\square - \square = \square$

5. மரத்திற்கு மிக அருகில் இருப்பது எது?



 ☐

 ☐

 ☐

நானே சொல்வேன்



6. சரியா தவறா எனக் கூறுக.

i)  இன் எண்ணிக்கையை விட  இன் எண்ணிக்கை அதிகம்.

ii)  இன் எண்ணிக்கையை விட  இன் எண்ணிக்கை குறைவு.

iii)  இன் எண்ணிக்கையை விட  இன் எண்ணிக்கை அதிகம்.

iv)  இன் எண்ணிக்கையை விட  இன் எண்ணிக்கை குறைவு.

v)  இன் எண்ணிக்கையும்  இன் எண்ணிக்கையும் சமம்.

7. உங்களது வகுப்பறையிலிருந்து தலைமை ஆசிரியரின் அறை, கொடிக்கம்பம், பள்ளி நுழைவாயில் ஆகியவற்றை உற்றுநோக்கிப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

i) கொடிக்கம்பத்திற்கு அருகில் உள்ளது எது?

ii) பள்ளி நுழைவாயிலுக்கு அருகில் உள்ளது எது?

iii) உங்களது வகுப்பறையிலிருந்து மிகத் தொலைவில் உள்ளது எது?

iv) உங்களது வகுப்பறைக்கு மிக அருகில் உள்ளது எது?

செயல்திட்டம்

8. கூடுதல் 9-ஐ தரும் கூட்டல் கூற்றுகளை எழுதுக.

	+		=	9
	+		=	9
	+		=	9
	+		=	9
	+		=	9

9. விடை 1-ஐ தரும் கழித்தல் கூற்றுகளை எழுதுக.

	–		=	1
	–		=	1
	–		=	1
	–		=	1
	–		=	1

கற்றல் பயணம்


1 முதல் 9 வரையிலான எண்களின் கழித்தல்
1 முதல் 9 வரையிலான எண்களின் கூட்டல்
1 முதல் 9 வரையிலான எண்களை ஒப்பிடுதல்
1 முதல் 9 வரையிலான எண்களைப் படித்தல் மற்றும் எழுதுதல்
பொருள்களை வண்ணம், அளவு மற்றும் வடிவத்தின் அடிப்படையில் பிரித்தல்

முதல் வகுப்பு

பருவம் – I

சூழ்நிலையியல்



முகவுரை

தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை (TNSEP) 2025-இன் அடிப்படையில் சூழ்நிலையியல் பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாடநூல் குழந்தை மைய, அனுபவ அடிப்படையிலான மற்றும் ஆராய்ந்து அறியும் வகையிலான கற்றலை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் முக்கியச் செயல்பாடுகள்



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்
படங்கள், வாழ்க்கைச் சூழல்கள் குறித்து கலந்துரையாடுவதன் மூலம் உற்றுநோக்கல், வினா கேட்டல், ஒப்பிடுதல் மற்றும் வெளிப்படுத்தும் திறன்களை வளர்த்தல்.



செய்து கற்போம்
எளிய செய்முறைகளின் வழியே ஆராய்தல், படைப்பாற்றல், அறிவாற்றல், அளவிடுதல் மற்றும் பதிவுசெய்தல் திறன்களை மேம்படுத்துதல்.



செய்து பார்ப்போம்
எளிய பரிசோதனைகள் வழியே ஊகித்தல், உற்றுநோக்கல், காரணமறிதல் மற்றும் முடிவுக்கு வருதல் போன்ற திறன்களை ஊக்குவித்தல்.



செயல்பாட்டு நேரம்
விளையாட்டு, குழுச் செயல்பாடுகள் மூலம் ஆராய்தல், ஒத்துழைப்பு மற்றும் வெளிப்படுத்தும் திறன்களை மேம்படுத்துதல்.

முதல் பருவப் பாடநூலின் இரண்டு அலகுகளிலும் **வளர்நிலைக் கற்றல்** (progressive learning) அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

1. என்னைப்பற்றி...



- குடும்பம், பள்ளி, அன்றாட பழக்கவழக்கங்கள் மற்றும் வீட்டிலும் பள்ளியிலும் உதவுதல் குறித்துக் கற்றுக்கொள்ளுதல்.
- உடல் உறுப்புகளையும், இயக்கங்களில் அவற்றின் பயன்பாட்டையும் புரிந்துகொள்ளுதல்.
- தன்சுத்தம் மற்றும் சுகாதாரமான பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதல்.

2. என்னைச்சுற்றி...



- சூரிய ஒளி, காற்று மற்றும் நீர் போன்றவை இயற்கையின் பரிசுகள் என்பதையும் அவற்றின் பயன்பாட்டையும், பகல்-இரவு சுழற்சியையும், நீரைச் சேமிப்பதன் முக்கியத்துவத்தையும் புரிந்துகொள்ளுதல்.
- நம்மைச் சுற்றியுள்ள விலங்குகள், அவற்றின் வாழிடம், உணவு, இயக்கம் மற்றும் அவற்றைப் பராமரிப்பது குறித்து அறிந்துகொள்ளுதல்.

பாடநூலின் சிறப்புக் கூறுகள்

அன்றாட வாழ்க்கைத் தொடர்பு
- சூழல் சார்ந்த கற்றல்
- அன்றாட வாழ்க்கை அனுபவங்களுடன் இணைத்தல்.
- சுற்றுச்சூழல் மற்றும் சமூக விழிப்புணர்வு.

21ஆம் நூற்றாண்டுத் திறன்கள்
- கூர்சிந்தனை, படைப்பாற்றல், இணைந்து செயல்படுதல், தகவல் தொடர்பு, சிக்கல் தீர்த்தல் போன்ற திறன்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

முழுமையான வளர்ச்சி
- விழுமியங்கள், வாழ்க்கைத் திறன்கள், சமூகத் திறன்கள் மற்றும் மனவெழுச்சி மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளித்தல்.
- செயல்பாடுகள் மூலம் நுண்தசை மற்றும் உடலியக்கத் திறன்களை வளர்த்தல்.

கற்றலுக்குத் துணைபுரிபவை
- எளிய மற்றும் வயதிற்கு ஏற்ற மொழிநடை பயன்பாடு.
- பாடநூலோடு ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி நூல்.
- ஆசிரியர் கையேடு
- எண்ம மற்றும் தகவல் தொழில்நுட்ப வளங்கள்

மதிப்பீடு மற்றும் கற்றல் முன்னேற்றத்திற்குத் துணைபுரிபவை



கற்றல் பயணம்
எளிய உற்றுநோக்கல் மற்றும் செயல்பாடு அடிப்படையிலான வினாக்கள் மூலம் குழந்தைகளின் புரிதலை மதிப்பீடு செய்து, கற்றல் முன்னேற்றத்தையும் கூடுதல் கவனம் தேவைப்படும் பகுதிகளையும் கண்டறிய உதவுகிறது.



நான் கற்றவை
குழந்தைகள் கற்ற முக்கியக் கருத்துகளை நினைவுகூரவும் சிந்திக்கவும் உதவுகிறது. மேலும், கற்றலை மீளாய்வு செய்யவும் வலுவூட்டவும் துணைபுரிகிறது.



நானே செய்வேன்
எளிய வாய்மொழி, எழுத்துச் செயல்பாடுகள், செயல்திட்டங்கள் மற்றும் அன்றாட வாழ்க்கைச் செயல்பாடுகள் வாயிலாகக் கற்பதைப் பயன்படுத்தும் வாய்ப்புகளை வழங்கி, தன்னம்பிக்கை மற்றும் சுயகற்றலை மேம்படுத்துகிறது.

இப்பாடநூலானது, அன்றாட வாழ்க்கையுடன் அறிவியலைத் தொடர்புபடுத்தி மகிழ்வுடன் பொருளுணர்ந்து கற்பதை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், குழந்தைகளின் விழுமியங்களையும் திறன்களையும் வளர்க்க வாய்ப்பளிப்பதன் மூலம் அவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவுகிறது. இது, குழந்தைகளை ஆர்வமுள்ள கற்போராகவும் பொறுப்புள்ள சமூக உறுப்பினராகவும் வளர்த்தெடுக்க உறுதுணை புரிகிறது.

பொருளடக்கம்

அலகு - 1 என்னைப்பற்றி...



என் உலகம்	80
என் நலம்	88

அலகு -2 என்னைச்சுற்றி...

இயற்கையின் பரிசுகள்	102
என்னைச் சுற்றியுள்ள விலங்குகள்	116



மின்னூல்

உள்ளடங்கிய மின்னூல்

ஆசிரியர் கையேடு

1 என்னைப்பற்றி...

என் உலகம்

என் குடும்பம்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நான் பெரிய குடும்பத்தில் வாழ்கிறேன்.





நான் என் அம்மாவுடனும் அக்காவுடனும் வாழ்கிறேன்.

நான் என் தாத்தாவுடனும் பாட்டியுடனும் வாழ்கிறேன்.





நான் என் அம்மாவுடனும் அப்பாவுடனும் வாழ்கிறேன்.

அன்பும் அக்கறையும் நிறைந்த சூழலே மகிழ்ச்சி தரும்.

ஆசிரியர் கையேடு

குழந்தைகளை அவர்களது மகிழ்ச்சியான குடும்பச் சூழல்களைப் பகிர்ந்துகொள்ள ஊக்கப்படுத்தவும்.

செய்து கற்போம்

1. புள்ளிகளை இணைத்து வரைக.



2. உங்கள் குடும்ப உறுப்பினர்களைப் படமாக வரைக.



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்



பணிகளைப் பகிர்வோம், மகிழ்ச்சியாக இருப்போம்.

செய்து கற்போம்

1. நீங்கள் நாள்தோறும் செய்யும் செயல்களுக்கு (✓) குறியிடுக.

நாள்				
திங்கள்				
செவ்வாய்				
புதன்				
வியாழன்				
வெள்ளி				
சனி				
ஞாயிறு				

ஆசிரியர் கையேடு

குழந்தைகள், தங்களது பணிகளைப் பொறுப்புடன் செய்வதற்கும் நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதற்கும் ஊக்கப்படுத்தவும்.

2. புள்ளிகளை இணைக்க.









3. எந்தப் பொருள் யாருக்கு? இணைக்க.

























என் பள்ளி

கலந்துரையாடுவோம்



இது என் பள்ளி.
நான் தினமும் பள்ளிக்கு வருவேன்.
படிப்பேன்; விளையாடுவேன்.

இங்கு பசுமையான தோட்டம்,
சுத்தமான கழிப்பறை உண்டு.

அன்பான ஆசிரியர்கள்,
அருமையான நண்பர்கள் உள்ளனர்.
என் பள்ளியை
எனக்கு மிகவும் பிடிக்கும்!







ஆசிரியர் கையேடு

- 'பள்ளி உலா' மேற்கொண்டு குழந்தைகளுக்குப் பள்ளியில் உள்ள இடங்களையும் அங்கு பணிபுரிபவர்களையும் அறிமுகப்படுத்தவும்.
- குழந்தைகளுக்குப் பள்ளியில் பிடித்த இடங்களையும் அவற்றிற்கான காரணங்களையும் சிறு குழுக்களில் பகிரச் செய்யவும்.

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்





செய்து கற்போம்

1. பொருள்களை இணைக்க.












எங்கள் வகுப்பறையைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்போம்.

2. நண்பர்களுடன் இணைந்து வடிவமைப்பை நிரப்புக.



3. வண்ண அமைப்புகளை அதற்குரிய பொருள்களுடன் பொருத்துக.



4. நீங்கள் செய்ய விரும்பும் செயல்களுக்கு வண்ணமிடுக.



கற்றல் பயணம்

1. நீங்கள் கைகளைக் கழுவும் இடங்களுக்கு (✓) குறியிடுக.







2. உங்களின் குடும்ப உறுப்பினர் ஒருவரைக் குச்சிப் படமாக வரைக.

3. நீங்கள் உங்கள் வீட்டில் உள்ளவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்?

4. சரியான செயல்களுக்கு (✓) குறியிடுக.

அ)



ஆ)



இ)



ஈ)



நான் கற்றவை

- நான் வீட்டில் உள்ளவர்களுக்கு உதவி செய்வேன்.
- என் பள்ளியில் உள்ள இடங்களையும் பணிபுரிபவர்களையும் எனக்குத் தெரியும்.
- நான் என் வீட்டையும் பள்ளியையும் தூய்மையாக வைத்துக்கொள்வேன்.
- நான் என் நண்பர்களுடன் மகிழ்ச்சியாக விளையாடுவேன்.

என் நலம்

என் உடல்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

ஆதி, கண்ணாடியைப் பார்க்கிறான்.



செயல்பாட்டு நேரம்

உங்கள் வலக்கையை உயர்த்துங்கள்



ஒருவர் பின்
ஒருவராக நிற்கவும்



திரும்பி நிற்கவும்



ஒருவரை ஒருவர்
பார்த்தவாறு நிற்கவும்



- குழந்தைகளைப் படத்தில் உள்ளவாறு இயக்கங்களைச் செய்ய வைக்கவும்.
- குழந்தைகளுக்கு உடலில் உள்ள தனித்த, இணையான உறுப்புகள், வலது – இடது பக்கங்கள் மற்றும் கண்ணாடியில் தெரியும் பிரதிபலிப்பு உருவங்கள் பற்றி எளிதாகப் புரிந்துகொள்ள உதவவும்.

ஒரே நேரத்தில் இரு கைகளையும் பயன்படுத்தி வடிவமைப்புகளை வரைக.







உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நாம் வேலை செய்யவும் விளையாடவும் நம் உடலின் பல்வேறு பாகங்களை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பது குறித்துக் கலந்துரையாடுக.



செயல்பாட்டு நேரம்

எந்தெந்த இயக்கங்களை உங்களால் செய்ய இயலும்?

உங்களால் செய்ய இயலும் சிறிய, பெரிய இயக்கங்களைச் செய்துகாட்டுக.



நம் உடலைப் பயன்படுத்தி, நாம் பல்வேறு இயக்கங்களைச் செய்கிறோம்.

ஆசிரியர் கையேடு

இச்செயல்பாட்டிற்கான பாதையைத் தரையில் வரைக. ஒவ்வோர் இயக்கத்தின் முடிவிலும் கைகளைத் தட்டும் எண்ணிக்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். நட – கைகளைத் தட்டு; கைகளைத் தட்டு, குதி – கைகளைத் தட்டு; கைகளைத் தட்டு; கைகளைத் தட்டு.

ஒரே நேரத்தில் இரண்டு செயல்களை உங்களால் செய்ய இயலுமா?





ஆசிரியர் கையேடு

படத்தில் குறிப்பிட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி, "தலையில் கை வைத்துக்கொண்டே முன்னால் குதி" போன்ற இயக்கங்களைத் தொடரவும்.

செய்து கற்போம்

1. ஒவ்வொரு குழந்தையும் அணிந்துள்ள பொருள்களை வட்டமிடுக.

ஜான்



கீதா



அப்துல்



	அப்துல்	ஜான்	கீதா
முன்னால்			
பின்னால்			
நடுவில்			
மேல்			
கீழ்			

2. பாடல் பாடுவோம்.

ஐந்து விரல்கள்

பலத்தைக்காட்டும் பெருவிரல்
சுட்டிக்காட்டும் சுட்டு விரல்
விரல்களில் உயர்ந்தது நடுவிரல்
மோதிரம் அணிய மோதிர விரல்
விரல்களில் சிறியது சுண்டு விரல்
ஐவிரல் சேர்ந்தால் பலமே!
இணைந்தே அற்புதங்கள் செய்வோமே!



3. உங்கள் உள்ளங்கையை வரைந்து வண்ணமிடுக.



தன்சுத்தமும் சுகாதாரமும்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நாம் ஏன் நம்மைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்?



பாவை செய்ய மறந்த செயல்களுக்கு (✓) குறியிடுக.






செயல்பாட்டு நேரம்







கைகளைத் தினமும் கழுவுவோம்
கைகளைத் தினமும் கழுவுவோம்
தேய்த்துத் தேய்த்துக் கழுவுவோம்
நன்றாகத் தேய்த்துக் கழுவுவோம்
விரல்கள் இடையில் தேய்ப்போம்
மேலும் கீழும் தேய்ப்போம்
சுத்தமான கைகளே
சுகம் தரும் எந்நாளுமே!





செய்து பார்ப்போம்

மிளகுத்தூளுக்கு என்ன நடந்தது?

மிளகுத்தூளை நீரில் சேர்க்கவும்.

சோப்பு நீரில் உன் விரலை நனைத்து, பின் மிளகுத்தூள் கலந்த நீரில் வைக்கவும்.

என்ன நிகழ்கிறது என்பதை உற்றுநோக்கவும்.







இதே முறையில் தான் சோப்பு அழுக்கை நீக்கும்.







செய்து கற்போம்

1. உனது நண்பருடன் இணைந்து கைகழுவும் முறையைச் செய்துபார்க்க.





2. கை கழுவும் படிநிலைகளை வரிசைப்படுத்தி எண் இடுக.



3. நீ எப்பொழுதெல்லாம் கைகளைக் கழுவுவாய்? செயலுக்கு பின் எனில் 🔴, முன் மற்றும் பின் எனில் 🟢 வண்ணமிடுக.



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்







தண்ணீரை ஊற்றுதல்



கைகளைக் கழுவுதல்

கழிப்பறையைப் பயன்படுத்தும் முன்னும் பின்னும்



பல்துலக்கியை ஈரமாக்குதல்



பற்பசையைச் சேர்த்தல்



துலக்குதல்
இடது - வலது
மேல் - கீழ்



வாய் கொப்பளித்தல்



நகங்களை வெட்டிச் சுத்தமாக வைத்திருத்தல்



குளித்தல்



தலைமுடியை வாருதல்



இப்பொழுது நான் பள்ளி செல்லத் தயாராகிவிட்டேன்.

நம்மைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள மேற்கண்ட செயல்களை நாள்தோறும் பின்பற்ற வேண்டும். காலையிலும் இரவிலும் நாம் பல் துலக்க வேண்டும்.

ஆசிரியர் கையேடு

குழந்தைகளைச் சிறு குழுக்களாகப் பிரித்து அன்றாடச் செயல்பாடுகளின் படிநிலைகளைச் செய்துகாட்டச் சொல்லவும்.

செய்து கற்போம்

1. அம்புக் குறியிட்டு வரிசைப்படுத்துக.



2. பல் துலக்கும் நேரங்களை (✓) குறியிடுக.



3. படத்தைப் பார்த்து நண்பர்களுடன் கலந்துரையாடுக.



அனைத்து உயிரினங்களும் நலமாக வாழத் தங்களைச் சுத்தமாக வைத்திருக்கின்றன.

4. நாள்தோறும் நீங்கள் பள்ளியில் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்களின் அருகே ☆-இல் வண்ணமிடுக.



உண்பதற்கு முன்னும் பின்னும் கைகழுவுதல்



விளையாடியபின் கைகழுவுதல்



கழிப்பறையைப் பயன்படுத்தியபின் கைகழுவுதல்

ஆசிரியர் கையேடு

வகுப்பறையில் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்களைக் குறித்துக் கலந்துரையாடவும்.

5. நம்மைச் சுத்தமாக வைத்துக்கொள்ளப் பயன்படும் பொருள்களுக்கு வண்ணமிடுக.



1. கவனமுடன் கேட்டு, செயல்களைச் செய்துகாட்டுக.

அ) வலக்கையை உயர்த்து

ஆ) ஓர் அடி முன்னால் குதி

இ) இடப்பக்கம் நகர்ந்திடு

ஈ) தலை உச்சியைத் தொடு

2. நிலா, தன்னைச் சுத்தமாக வைத்திருக்க உதவும் பொருள்களுக்கு (✓) குறியிடுக.












3. சுகாதாரமான செயல்களுக்கு 👍 நிழலிடுக.

சுகாதாரமற்ற செயல்களுக்கு 👎 நிழலிடுக.






4. கழிப்பறையைப் பயன்படுத்தியபின் நீங்கள் என்ன செய்வீர்கள்?

- தனி மற்றும் இணை உடல் உறுப்புகளை அறிந்து கொண்டேன்.
- எனது உடலின் வலப்பக்கத்தையும் இடப்பக்கத்தையும் அடையாளம் காட்டுவேன்.
- முறையான படிநிலைகளைப் பின்பற்றி கைகளைக் கழுவுவேன்.
- முறையான படிநிலைகளைப் பின்பற்றி பல் துலக்குவேன்.
- எனது உடலைச் சுத்தமாக வைத்திருப்பேன்.

நானே செய்வேன்

1. இணை உடல் உறுப்புகளின் மீது (●) இடுக.
பெருவிரலையும் மோதிர விரலையும் வட்டமிடுக.



2. இனியன் தூங்கி எழுந்தவுடன் செய்ய வேண்டிய செயலை வட்டமிடுக.





3. படங்களுக்கு வரிசைப்படி எண்கள் இடுக.








4. நமக்குக் கற்பிப்பவர் யார்? (✓) குறியிடுக.







5. வாய்மொழி வினாக்கள்

அ. உங்கள் குடும்பத்தில் நடந்த சில மகிழ்ச்சியான நிகழ்வுகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள். மேலும், உங்களது குடும்பத்திற்கு நீங்கள் உதவும் ஒரு செயலைக் கூறுக.

ஆ. உங்களது பள்ளியில் உள்ள இடங்களின் பெயர்களைக் கூறுக.

6. செயல்திட்டம்

ஒரு வாரத்திற்கு நீங்கள் கடைப்பிடிக்கும் சுகாதாரப் பழக்கவழக்கங்களுக்கு (✓) குறியிடுக.

செயல்பாடுகள்					
திங்கள்					
செவ்வாய்					
புதன்					
வியாழன்					
வெள்ளி					
சனி					
ஞாயிறு					

2 என்னைச் சுற்றி...

இயற்கையின் பரிசுகள்



சூரியன், காற்று, நீர் நமக்குக் கிடைத்த இயற்கையின் பரிசுகள்.

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நமக்கு ஏன் சூரிய ஒளி தேவை?



உலர்ந்து கொண்டிருக்கும் ஆடைகளுக்கு வண்ணமிடுக.

உங்களால் எல்லா நேரங்களிலும் சூரியனைப் பார்க்க முடியுமா?



இரவும் பகலும் மாறிமாறி வருகின்றன.

ஆசிரியர் கையேடு

இரவும் பகலும் தொடர் நிகழ்வு என்பதைக் கூறவும்.

செய்து கற்போம்

1. அதிக வெப்பமான நாளுக்குப் பொருத்தமான பொருள்களைத் தெரிவு செய்து சையது வீட்டிற்குச் செல்ல உதவுக.



வெப்பம் மிகுந்த நாளில் அதிகளவு நீர் அருந்தவும்.



2. புள்ளிகளை இணைத்து வேறுபாட்டைக் கண்டுபிடிக்க.







3. பகல் மற்றும் இரவு வானில் நீங்கள் பார்த்தவற்றை வரைக.









செய்து பார்ப்போம்

ஒரு பெரிய கல்லைச் சூரிய ஒளிபடும் இடத்திலும் மற்றொரு கல்லை வகுப்பறையின் உள்ளேயும் வையுங்கள். சில மணிநேரம் கழித்துத் தொட்டுப்பார்த்து வேறுபாட்டை உணருங்கள்.

செய்து பார்ப்போம்

காற்றை நம்மால் பார்க்க முடியுமா?

உங்கள் கையின்மேல் ஊதிப் பாருங்கள். என்ன உணர்கிறீர்கள்?



நம்மைச் சுற்றிலும் காற்று உள்ளது.
அதை நம்மால் பார்க்க முடியாது.
ஆனால், அதை உணர முடியும்.
நாம் சுவாசிக்கக் காற்று தேவை.

ஓர் உறிஞ்சுகுழலைப் பயன்படுத்தி ஊதுங்கள்.



காற்று, பொருள்களை
நகர்த்த உதவுகிறது.

செய்து கற்போம்

1. காற்றில் நகரும் பொருள்களுக்கு வண்ணமிடுக.



2. காகிதத்தில் பொம்மைகள் செய்க.





உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நமக்கு நீர் எங்கிருந்து கிடைக்கிறது?

மழை நமக்கு நீரைத் தருகிறது. மழையால் ஏரி, குளங்கள் நிரம்புகின்றன.

மழை பெய்யும் நாளில் நம்மை நனையாமல் வைத்திருக்க உதவும் பொருள்களுக்கு வண்ணமிடுக.



செய்து கற்போம்

1. மழையின் சத்தத்தை உருவாக்குவோம்.



2. காகிதப் படகு செய்வோம்.

காகிதப் படகு



பக்கத்தைத்
திருப்பவும்





உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நீரில் உயிரினங்கள் உள்ளனவா?

பல வகையான தாவரங்களும் விலங்குகளும் நீரில் வாழ்கின்றன.

விலங்குகளுக்கு வண்ணமிடுக.



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நாம் நீரை எந்தெந்தச் செயல்களுக்குப் பயன்படுத்துகிறோம்?



நீர் பயன்படுத்தப்படும் இடங்களில் வரைக.

செய்து கற்போம்

1. நீரைச் சரியாகப் பயன்படுத்தும் செயலுக்கு , வீணாக்கும் செயலுக்கு வரைக.










நீரைச் சேமிப்போம். பூமியைப் பசுமையாக்குவோம்.

2. புள்ளிகளை இணைப்போம்.

பாத்திரத்தின் உயரத்திற்கேற்ப 1 முதல் 5 வரை எண்களை இடுக.



நாம் நீரைப் பல்வேறு பாத்திரங்களில் சேமிக்கிறோம்.



செய்து பார்ப்போம்

நீரில் என்ன மாற்றம் நிகழ்கிறது என்பதைக் காண்க.



நீரை உற்றுநோக்கி உரிய வண்ணமிடுக.

உப்பு



1 தேக்கரண்டி

மணல்



1 தேக்கரண்டி

கூழாங்கற்கள்

சில









உற்றுநோக்கி, வரைந்து, வண்ணமிடுக.



இவை அனைத்தும் உற்றுநோக்கும் பயிற்சிகள் மட்டுமே. பரிசோதனைகளைச் செய்துகாட்டி குழந்தைகளை உற்றுநோக்கச் செய்யவும்.



செய்து கற்போம்

வீட்டில் செய்து பாருங்கள்.

1.  வெட்டி, வண்ணத்தில் தொட்டு, காகிதத்தில் வடிவங்களை உருவாக்குக.







2. எலுமிச்சம் பழச்சாறு தயாரிக்க.



செய்து பார்ப்போம்

எது மிதக்கும்? எது மூழ்கும்?

மிதக்கும் பொருள்களுக்கு வண்ணமும் மூழ்கும் பொருள்களுக்கு வண்ணமும் இடுக.



















நீரில் மிதக்க மிதவை உடை உதவுகிறது.

கற்றல் பயணம்

1. உற்றுநோக்கி (✓) குறியிடுக.



பகல் ☐ இரவு ☐



பகல் ☐ இரவு ☐



பகல் ☐ இரவு ☐



பகல் ☐ இரவு ☐

2. நீரைச் சரியாகப் பயன்படுத்தும் செயலுக்கு 🙂, வீணாக்கும் செயல்களுக்கு ☹ வண்ணமிடுக.













3. மழைக்காலங்களில் நாம் பயன்படுத்தும் பொருள்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக.



4. குழாயில் நீர் ஒழுகுவதைப் பார்த்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? பகிர்க.



நான் கற்றவை

என்னால்...

- பகலையும் இரவையும் வேறுபடுத்திக் கூற முடியும்.
- சூரிய ஒளி, நீர் மற்றும் காற்று எவ்வாறு நமக்கு உதவுகின்றன என்பதை விளக்க முடியும்.
- என் வீட்டில் நீரின் பல்வேறு பயன்பாடுகளை நான் அறிந்துகொண்டேன்.
- நீரைச் சரியான முறையில் பயன்படுத்தி, சேமிக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற முடியும்.

என்னைச் சுற்றியுள்ள விலங்குகள்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நம்மைச் சுற்றியுள்ள விலங்குகள் யாவை?

நம்மைச் சுற்றிப் பல வகையான விலங்குகள் உள்ளன.

அவற்றுள் சில நிலத்திலும், சில நீரிலும், சில நிலம், நீர் ஆகிய இரண்டிலும் வாழ்கின்றன.



செய்து கற்போம்

1. உருவ அளவின் அடிப்படையில் 1 முதல் 5 வரை எண் இடுக.

அ.











ஆ.











2. புள்ளிகளை இணைத்து வண்ணமிடுக.



3. விலங்குகளை அவற்றின் வாழிடத்தில் வரைக.





நிலத்தில் வாழும்	நீரில் வாழும்
	

செயல்பாட்டு நேரம்

விலங்குகள் எவ்வாறு இடம்விட்டு இடம் நகர்கின்றன? அவை எத்தகைய ஒலிகளை எழுப்புகின்றன?





சில விலங்குகள் நடக்கின்றன; சில பறக்கின்றன; சில நீந்துகின்றன மற்றும் சில தாவுகின்றன. அவை வெவ்வேறு ஒலிகளை எழுப்புகின்றன.

ஆசிரியர் கையேடு

குழந்தைகளை விலங்குகளைப்போல நகரவும் ஒலி எழுப்பவும் பின்னர் நகர்ந்து கொண்டே ஒலி எழுப்பவும் சொல்லவும்.

செய்து கற்போம்

1. கால்களின் எண்ணிக்கையை எண்ணி எழுதுக.



2. வகைப்படுத்தி வரைக.



பறக்கும்	நடக்கும், பறக்கும்
நீந்தும்	நடக்கும், பறக்கும், நீந்தும்

3. பூனையை வரைக.

1. 
2. 
3. 
4. 

செய்து பார்ப்போம்

ஈரமான மண்ணைத் தட்டில் எடுக்கவும்

உன்னுடைய பாதங்களை அதில் பதிக்கவும்

பாதச்சுவட்டை உற்றுநோக்கவும்



அனைத்து விலங்குகளின் பாதச்சுவடுகளும் ஒரே மாதிரியாக உள்ளனவா?



விலங்குகளை அவற்றின் பாதச்சுவடுகளுடன் பொருத்துக.

















உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

விலங்குகள் எவ்வகையான வாழிடங்களைப் பெற்றுள்ளன?



விலங்குகள் வெவ்வேறு விதமான வாழிடங்களில் வாழ்கின்றன.

செய்து கற்போம்

1. சிலந்தி வலையை நிறைவு செய்க.





மரங்கொத்தி, மரத்தில் துளையை உருவாக்கி, அப்பொந்தினுள் வாழ்கிறது.



ஆசிரியர் கையேடு

குழந்தைகளிடம் விலங்குகளின் வாழிடங்கள் குறித்துக் கலந்துரையாடவும்.

2. என் வீட்டிற்குச் செல்ல உதவுக.









3. புள்ளி வண்டை வரைந்து வண்ணமிடுக.



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்









விலங்குகள், தங்கள் குட்டிகளைப்/குஞ்சுகளைப் பல்வேறு வழிகளில் பராமரிக்கின்றன.

தற்போது, சிட்டுக்குருவிகள் எண்ணிக்கையில் குறைந்து வருகின்றன. அவற்றைப் பாதுகாப்போம்.

செய்து கற்போம்

1. அம்மாவைக் கண்டுபிடித்து வண்ணமிடுக.











2. விலங்குகளுக்குரிய உணவினை வரைக.



பால்



எலும்புத்துண்டு



புல்



தானியங்கள்









3. நாய் பொம்மை செய்வோம்.



ஆசிரியர் கையேடு

பொம்மையை உருவாக்கக் குழந்தைகளுக்கு உதவவும்.

விலங்குகளைப் பாதுகாத்தல்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்



விலங்குகளைத் துன்புறுத்தாமல் அவற்றைப் பாதுகாப்போம்.









செய்து கற்போம்

1. சரியான செயலுக்கு ☺, தவறான செயலுக்கு ☹ வரைக.









2. வண்ணம் தீட்டி மகிழ்க.





கற்றல் பயணம்

1. நான் யார்? கண்டுபிடித்து (✓) குறியிடுக.

அ. நான் பறப்பேன்.




ஆ. என்னால் நடக்கவும் பறக்கவும் முடியும்.




2. உரிய வாழிடத்தை வட்டமிடுக.

அ.  —




ஆ.  —




3. நான் யார்? கண்டுபிடித்து (✓) குறியிடுக.

அ. நான் தானியங்களைச் சாப்பிடுவேன்.




ஆ. நான் புல்லைச் சாப்பிடுவேன்.




4. இளம் உயிரிகளை அவற்றின் தாயுடன் இணைக்க.











5. சரியான விடைக்கு (✓) குறியிடுக.



அ. எறும்பு எங்கே வாழ்கிறது?




ஆ. எறும்பு என்ன சாப்பிடும்?






நான் கற்றவை

- என்னைச் சுற்றியுள்ள விலங்குகளின் பெயர்களைக் கூறுவேன்.
- விலங்குகளை அவற்றின் அளவு மற்றும் வாழிடம் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்துவேன்.
- நான் விலங்குகளைப் பாதுகாப்பேன்.

நானே செய்வேன்

1. சூரிய ஒளியில் உலரும் பொருள்களுக்கு (✓) குறியிடுக.






2. விலங்குகளை அவற்றின் வாழிடங்களோடு கோடிட்டு இணைக்க.






நிலம்



நீர்



3. நீரைச் சரியாகப் பயன்படுத்தும் செயல்களுக்கு (✓) குறியிடுக. நீரை வீணாக்கும் செயல்களுக்கு (×) குறியிடுக.






4. காற்றில் பறக்கக் கூடியவற்றிற்கு வண்ணமிடுக.






5. வாய்மொழி வினாக்கள்

அ. நீங்கள் நீரை எவற்றிற்கெல்லாம் பயன்படுத்துவீர்கள்?



ஆ. காயமடைந்த பறவையைப் பார்த்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?



6. செயல்திட்டம்

- விடுமுறை நாளில் உங்கள் வீட்டைச் சுற்றியுள்ள விலங்குகளை உற்றுநோக்கி, அட்டவணையை நிரப்புக.
- நீங்கள் உற்றுநோக்கியவை குறித்து ஓரிரு தொடர்களைக் கூறுக.

விலங்குகள்	கால்களின் எண்ணிக்கை	இயக்கங்கள்			வாழிடங்கள்		
		நடக்கும்	பறக்கும்	நீந்தும்	நிலம்	நீர்	இரண்டிலும்
வாத்து	2	✓	✓	✓	–	–	✓
பசு							
காகம்							
நாய்							
பூனை							

திறம்பட இயங்கு! தெளிவாகச் சிந்தி!

குழந்தைகளின் கவனக் குவிப்பிற்கும் ஒருங்கிணைப்பிற்கும் வாரத்திற்கு ஒரு பயிற்சி வீதம் நாள்தோறும் ஐந்து நிமிடங்கள் செய்ய வைக்க வேண்டும்.

1.

இடது சுட்டு விரலால் வலது உள்ளங்கையைச் சுட்டிக் காட்டவும்.





வலது சுட்டு விரலால் இடது உள்ளங்கையைச் சுட்டிக் காட்டவும்.

2.



கைகளைக் கீழே இறக்கி நேராக நிற்கவும்.



வலது கால் முட்டியை இடது முழங்கையால் தொடவும்.



இடது கால் முட்டியை வலது முழங்கையால் தொடவும்.



கைகளைக் கீழே இறக்கி நேராக நிற்கவும்.

3.



இடது முழங்காலை உயர்த்தி அதன் மீது இரு கைகளையும் வைக்கவும்.



தொலைநோக்கியில் பார்ப்பதுபோல் கைகளை வைக்கவும்.



வலது முழங்காலை உயர்த்தி அதன் மீது இரு கைகளையும் வைக்கவும்.



தொலைநோக்கியில் பார்ப்பதுபோல் கைகளை வைக்கவும்.

4.



விரல்களை முயலின் காதுகளைப்போல் வைக்கவும்.



உள்ளங்கைகளை ஒன்றாகச் சேர்க்கவும்.



மணிக்கட்டுகளைச் சேர்த்து உள்ளங்கைகளைத் திறக்கவும்.

5.



கைகளை நீட்டி
விரல்களைக்
கோர்த்துக் கொள்ளவும்.



குனிந்து கைகளைச் சுற்றவும்.

6.



இடது ஆள்காட்டி
விரலை நீட்டிக்
காட்டவும்.



கிடை மட்டமாக எண் 8-ஐ வரையவும்.

இதேபோன்று வலது கையைப்
பயன்படுத்திச் செய்யவும்.

7.



இடது ஆள்காட்டி
விரலை நீட்டிக்
காட்டவும்.



செங்குத்தாக எண் 8-ஐ வரையவும்.

இதேபோன்று வலது கையைப்
பயன்படுத்திச் செய்யவும்.

8.

உட்கார்ந்த
நிலையில் கைகளை
முழங்கால்களின் மீது
வைக்கவும்.



இடது கையை வலது
தோள்பட்டையின்
மீது வைக்கவும்.



கைகளை
மூன்று முறை
தட்டவும்.



இதேபோன்று வலது கையைப்
பயன்படுத்திச் செய்யவும்.

அமைப்புகளை நிறைவு செய்வோம்









































கற்றல் பயணம்


சுற்றுப்புறத்தில் காணப்படும் விலங்குகளை அடையாளம் காணுதல்.
சூரிய ஒளி, காற்று மற்றும் நீரின் முக்கியத்துவத்தை உணர்தல்.
சுத்தம் மற்றும் சுகாதார பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதல்.
உடலின் வலது மற்றும் இடது பக்கங்களை வேறுபடுத்தி அறிதல்.
பள்ளியில் உள்ள இடங்களையும் அங்கே பணிபுரிபவர்களையும் அடையாளம் காணுதல்.
குடும்பத்தில் நிகழும் அன்பு மற்றும் அக்கறையான சூழல்களை உணர்தல்.

முதல் வகுப்பு – கணக்கு – முதல் பருவம்

பாடநூல் உருவாக்கக் குழு

பாட வல்லுநர்

முனைவர் இரா. இராமானுஜம்,
முன்னாள் பேராசிரியர்,
கணித அறிவியல் நிறுவனம் (IMSc), சென்னை.

மேலாய்வாளர்கள்

திருமதி. கி. கிருத்திகா,
ஆராய்ச்சி மையம், அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம்,
பெங்களூரு.

முனைவர் தெ. காசி,
முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், உத்தமபாளையம்,
தேனி மாவட்டம்.

நூலாசிரியர்கள்

திருமதி. பா. தமிழ்ச்செல்வி,
பாட ஒருங்கிணைப்பாளர், முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
களியாம்பூண்டி, காஞ்சிபுரம் மாவட்டம்.

நா. வி. பூர்ணிமா தேவி,
பட்டதாரி ஆசிரியை, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,
திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

ரா. ரஜனி,
பட்டதாரி ஆசிரியை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
பாப்பான்குளம், மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்.

நா. பிரபாகரன்,
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி,
காந்திநகர், புதுக்கோட்டை மாவட்டம்.

பி. ரேவதி,
இடைநிலை ஆசிரியை, வடசென்னை நடுநிலைப் பள்ளி,
பழையவண்ணாரப்பேட்டை, சென்னை மாவட்டம்.

சே. ஸ்வீட்லின் ஹில்டா ஜான்ஸிராணி,
இடைநிலை ஆசிரியை, நேரு வித்தியாசாலை
ஆரம்பப் பள்ளி, நரிமேடு, மதுரை மாவட்டம்.

ரா. விஜயகுமார்,
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றியத்
தொடக்கப்பள்ளி, நரணி குப்பம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

பெ. நிரோஷா,
இடைநிலை ஆசிரியை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்
பள்ளி, பு. கா. வளவு, தருமபுரி மாவட்டம்.

ஜெ. ரமணி,
இடைநிலை ஆசிரியை, கோமதி நடுநிலைப்பள்ளி,
அனுப்பானடி, மதுரை மாவட்டம்.

ல.ராதா,
இடைநிலை ஆசிரியை, ஊ.ஒ.தொ.பள்ளி, மணவாளநகர்,
திருவள்ளூர் மாவட்டம்.

மெய்ப்புத் திருத்துநர்

சோ. விஜயராகவன்,
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம்.

மின்னுரு பாடப்பொருள் உருவாக்கக் குழு

பா. மேக்டலின் பிரேமலதா,
மின்னுரு பாடப்பொருள் ஒருங்கிணைப்பாளர்,
பட்டதாரி ஆசிரியர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை மாவட்டம்.

த. சிவமலர்மன்னன்,
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றியத்
தொடக்கப்பள்ளி, கொக்கரக்கல் வலசு,
தொப்பம்பட்டி ஒன்றியம், திண்டுக்கல் மாவட்டம்

சு. கோபாலகிருஷ்ணன்,
பட்டதாரி ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
குன்னம், பெரம்பலூர் மாவட்டம்.

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

ம. அமல்ராஜ்
வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர், பட்டதாரி ஆசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

சி. பிரசாந்த், வடிவமைப்பாளர்
ச. அசோக் குமார், வடிவமைப்பாளர்

வரைபடம்

இரா. இராஜேஷ்
பா. பிரமோத்

அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

முதல் வகுப்பு – சூழ்நிலையியல் – முதல் பருவம்

பாடநூல் உருவாக்கக் குழு

பாட வல்லுநர்கள்

பேராசிரியர். சுல்தான் அகமது இஸ்மாயில்,
மண் உயிரியலாளர் மற்றும் சூழலியலாளர், சென்னை.

மருத்துவர். சுசித்ரா ராம்குமார்,
உபாசனா கற்றல் மற்றும் நலவாழ்வு மையம்,
அடையாறு, சென்னை.

மேலாய்வாளர்கள்

முனைவர். நா. வளர்மதி, முதல்வர் (பொறுப்பு),
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.

ரா. சரண்யா, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

நூலாசிரியர்கள்

முனைவர். சீ. பிரபு, பாட ஒருங்கிணைப்பாளர்,
துணை இயக்குநர் (பாடத்திட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

நா. ரெ. மகாலிங்கம், விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்டம்.

தா. இராஜகுமார், பட்டதாரி ஆசிரியர்,
உ. ஒ. ந. நி. பள்ளி, முத்துநாகையாபுரம்,
சேடபட்டி ஒன்றியம், மதுரை மாவட்டம்.

நா. ரமேஷ் பாபு, பட்டதாரி ஆசிரியர்,
உ. ஒ. ந. நி. பள்ளி, ஆட்டந்தாங்கல்,
சோழவரம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

சு. மதன்மோகனா, பட்டதாரி ஆசிரியர்,
உ. ஒ. ந. நி. பள்ளி, விளத்தூர்.
மாணாமதுரை ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்.

ந. நாராயணன், இடைநிலை ஆசிரியர்,
க. வா. தொ. தொ. பள்ளி, ஆவடி,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

கா. ஜெயபாபு, இடைநிலை ஆசிரியர்,
உ. ஒ. தொ. பள்ளி, சிட்டுலொட்டி,
தே.கல்லுப்பட்டி ஒன்றியம், மதுரை மாவட்டம்.

க. கந்தசாமி, இடைநிலை ஆசிரியர்,
உ. ஒ. ந. நி. பள்ளி, கருங்காலக்குடி,
காளையார்கோவில் ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்.

வா. சரண்யா, இடைநிலை ஆசிரியர்,
உ. ஒ. தொ. பள்ளி, ஆண்டித்தாங்கல்,
உத்திரமேரூர் ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டம்.

ரெ. தமிழ்ச்செல்வன், இடைநிலை ஆசிரியர்,
உ. ஒ. ந. நி. பள்ளி, மணகெதி,
தா.பழூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.

மெய்ப்புத் திருத்துநர்

சு. அரும்புமொழி, முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.

மின்னுரு பாடப்பொருள் உருவாக்கக் குழு

பா. மேக்டலின் பிரேமலதா,
மின்னுரு பாடப்பொருள் ஒருங்கிணைப்பாளர்,
பட்டதாரி ஆசிரியர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

இரா. கோபிநாத், இடைநிலை ஆசிரியர்,
உ. ஒ. ந. நி. பள்ளி, இராஜாக்குப்பம்,
குடியாத்தம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

அ. ஜேம்ஸ் பாண்ட், ஓவிய ஆசிரியர்,
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, அறந்தாங்கி,
புதுக்கோட்டை மாவட்டம்

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

ம. அமல்ராஜ்
வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர், பட்டதாரி ஆசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

தி.க.பூர்ணசந்திரன், வடிவமைப்பாளர்

ம.இயேசு ரெத்தினம், வடிவமைப்பாளர்

வரைபடம்

ம. குருமணி, ஓவிய ஆசிரியர்,
அரசு மாதிரி மே. நி. பள்ளி,
அரும்பாக்கம், சென்னை.

இரா. ராஜேஷ்.

அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட்
மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்: